நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சங்ககிரி

முன்னிலை : திருமதி. எஸ்.சத்தியா, பி.ஏ., பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06- ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 225 / 2024**

**(CNR.No. TNSA09-001053-2024)**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசு தரப்பில் காவல் உதவி ஆய்வாளர், சங்ககிரி காவல் நிலையம், கு.எண். 100/2022 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | - | சதீஷ்குமார் த/பெ. பெருமாள் ஒழுகுபாறை, அன்னதானப்பட்டி, மாவேலிபாளையம், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் |
| வனையப்பட்ட குற்றங்கள் | - | U/s. 279, 338 of IPC |
| குற்றம் நிகழ்ந்த நாள் | - | 15.03.2022 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | - | 18.03.2022 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | - | 21.03.2022 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | - | 21.03.2022 (Station bail) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | - | 07.02.2023 |
| எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 03.05.2023 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | - | 16.02.2026 |

| | | |
|---|---|---|
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | - | 02.03.2026 |
| குவிமுச.பிரிவு.311-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | | Nil |
| குவிமுச.பிரிவு.313(1)(ஆ)-இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 04.03.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | - | Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | - | Nil |
| தீர்மானம் | - | எதிரி U/s. 279, 338 of IPC - ன் கீழ் குற்றவாளி |
| முடிவு | - | இறுதியாக, எதிரிமீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 279, 338(2 Counts) of IPC-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவுசெய்து, எதிரி பிரிவுகள் 279, 338 (2 Counts) of IPC-ன் கீழ் குற்றவாளியென தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 279 of IPC -ன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/- அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் இரண்டுவாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும், பிரிவு 338 of IPC பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.2000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் |

| | | |
|---|---|---|
| | | இரண்டுவாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும் விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2) -ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. 3000/-. வழக்குச்சொத்து இல்லை. |

இந்த வழக்கு 18.07.2024 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.M.ரவி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**தீர்ப்புரை**

**சங்ககிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்:**

2. 1) கடந்த 14.03.2022- ஆம் தேதி இரவு 18.50 மணி சுமாருக்கு சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, கோவை to சேலம் NH பைபாஸ் ரோட்டில் காயம்பட்ட சாட்சி-2 விக்னேஷ் என்பவர் TN 30 BP 3369 என்ற பதிவெண்கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு பின்னால் காயம்பட்ட சாட்சி-3 விஜயை உட்காரவைத்து கொண்டு கோவை பக்கமிருந்து சேலம் நோக்கி சென்றுகொண்டிருந்தபோது, வைகுந்தம்

டோல்கேட்டுக்கு முன்பாக உள்ள 99 காபி பார் கடை அருகே சென்று கொண்டிருந்தவர்கள் மீது எதிரே ராங்சைடில் சேலம் பக்கமிருந்து கோவை நோக்கி வந்த எதிரி TN 46 F 8561 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் வண்டியை அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று சாட்சி-2 மற்றும் சாட்சி-3 சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச. பிரிவு 279 - ன் கீழும்,

2.2) மேற்படி அதே தேதி, அதே நேரம், அதே இடத்தில் வைத்து அதே சம்பவத்தின் போது, சாட்சி-2 மற்றும் சாட்சி -3-க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச. பிரிவு 338(2 Counts) - ன் கீழும் சங்ககிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது. அதன் பின்பு குவிமுச பிரிவு 251-ன் கீழ் எதிரியிடம் 279, 338 (2 Counts) இ.த.ச பிரிவுகளின் கீழ் குற்றங்கள் பற்றி வினவ எதிரி குற்றங்களை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சாராம்சம் பின்வருமாறு</u>** : -

4. 1) அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 14.02.2022 ம் தேதி, இரவு சுமார் 08.00 மணியளவில் தனது அம்மா பழனியம்மாள் தன்னை தொலைபேசியில் தொடர்பு

கொண்டு தனது அண்ணன் விக்னேஷ் சங்ககிரியில் இருந்து வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக அவரது இருசக்கர வாகனத்தில் சங்ககிரி டோல்கேட்டிற்கு முன்பாக வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது டிராக்டர் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டிருப்பதாகவும், அவரை சேலம் விம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்திருப்பதாக தகவல் கிடைத்ததாகவும், தகவல் அறிந்து தான் அங்கு சென்று பார்த்தபோது அவருக்கு கன்னத்திலும், காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததாகவும், அவரை மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் சேர்த்ததாகவும், பின்னர் இது சம்பந்தமாக சங்ககிரி காவல் நிலையத்தில் எழுத்துபூர்வமான புகார் **(அ.சா.ஆ.1)** கடந்த 18.03.2022 ம் தேதி கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

4. 2) அ.சா.3 திரு.செல்வகுமார் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான SSI திரு. சண்முககுமார் அவர்களின் கையொப்பம் தனக்கு அவருடன் பணிபுரிந்த வகையில் பரிட்சையம் என்பதால் தான் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 18.03.2022 ம் தேதி பிற்பகல் 03.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக திரு. சண்முககுமார் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது கோபி என்பவரின் மனைவி லாவண்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் சங்ககிரி

காவல் நிலைய குற்ற எண்.100/2022, சட்டப்பிரிவுகள் 279, 337 இதச-ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ.2**) பதிவு செய்ததாகவும்,

4. 3) பின்னர், அன்றைய தினமே, மாலை சுமார் 04.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சிவா மற்றும் பழனிசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார்செய்து **(அ.சா்.ஆ.3)** மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.4)** வரைந்து சாட்சிகள் கையொப்பம் பெற்றதாகவும்,

4. 4) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து எதிரியை தேடிவந்த நிலையில் கடந்த 21.03.2022 ஆம் தேதி, மாலை சுமார் 06.00 மணிக்கு கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்ததாகவும்,

4.5) பின்னர், இவ்வழக்கு விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பிவைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.புஷ்பா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து ஆய்வறிக்கைகளை (**அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6**) பெற்றதாகவும்,

4.6) பின்னர், அன்றைய தினமே, விபத்தில் காயமடைந்த விஜய்

என்பவருக்கு சிகிச்சையளித்த சேலம் விம்ஸ் மருத்துவமனை மருத்துவர் திரு.சிவா என்பவரையும் மற்றும் கோவை கங்கா மருத்துவமனை சென்று விபத்தில் காயமடைந்த விக்னேஷ், என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் குமரன் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து விஜய் என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை **(அ.சா.ஆ.7)** மற்றும் காயச்சான்றிதழ் **(அ.சா.ஆ.9)** மற்றும் விக்னேஷ் என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை **(அ.சா.ஆ.8)** மற்றும் காய்சான்றிதழ் **(அ.சா.ஆ.10)** பெற்றதாகவும்,

4.7) பின்னர், விஜய், விக்னேஷ் ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என மருத்துவர் காயச்சான்று வழங்கியதால் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 338 (2 Counts ) இதச- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை **(அ.சா.ஆ.11)** கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்ததாகவும், அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 338 இதச- ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)-ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரி அதனை மறுத்தார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

6. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

7. அரசுதரப்பில் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் குறியீடும் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகளான 3 முதல் 9 வரையானவர்கள் அரசுதரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள். எதிரிதரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்</u>:

8. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

9. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டணை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. மாறாக எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள்

தம்முடைய வாதத்தில், அ.சா.2 -ன் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும், எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கில் புகார்தாரர் சாட்சியாக அ.சா.1-ம், காயம்பட்ட சாட்சியாக அ.சா2-ம், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா-3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

12. 1) எதிரி மீதான இதச 279, 338 - ஆகிய பிரிவுகளின் கீழான குற்றம் குறித்து பரிசீலிக்கும்போது, அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 14.03.2022- ஆம் தேதி இரவு 18.50 மணி சுமாருக்கு சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, கோவை to சேலம் NH பைபாஸ் ரோட்டில் காயம்பட்ட சாட்சி-2 விக்னேஷ் என்பவர் TN 30 BP 3369 என்ற பதிவெண்கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு பின்னால் காயம்பட்ட சாட்சி-3 விஜயை உட்காரவைத்து கொண்டு கோவை பக்கமிருந்து சேலம் நோக்கி சென்றுகொண்டிருந்தபோது, வைகுந்தம் டோல்கேட்டுக்கு முன்பாக உள்ள 99 காபி பார் கடை அருகே சென்று கொண்டிருந்தவர்கள் மீது எதிரே ராங்சைடில் சேலம் பக்கமிருந்து கோவை நோக்கி வந்த எதிரி TN 46 F 8561 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் வண்டியை அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று சாட்சி-2 ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, சாட்சி-2 மற்றும் சாட்சி3 -க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்பதாகும்.

12.2) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் கடந்த 14.03.2022-ஆம் தேதி இரவு 18.50 மணி சுமாருக்கு சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, கோவை to சேலம் NH பைபாஸ் ரோட்டில் காயம்பட்ட சாட்சி-2 விக்னேஷ் என்பவர் TN 30 BP 3369 என்ற பதிவெண்கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு பின்னால் காயம்பட்ட சாட்சி-3 விஜயை உட்காரவைத்து கொண்டு கோவை பக்கமிருந்து சேலம் நோக்கி சென்றுகொண்டிருந்தபோது, வைகுந்தம் டோல்கேட்டுக்கு முன்பாக உள்ள 99 காபி பார் கடை அருகே சென்று கொண்டிருந்தவர்கள் மீது எதிரே ராங்சைடில் சேலம் பக்கமிருந்து கோவை நோக்கி வந்த எதிரி TN 46 F 8561 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் வண்டியை ஓட்டிச்சென்றுள்ளதும், அப்போது சாட்சி-2 மற்றும் சாட்சி-3 சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளதும் நிரூபணமாகியுள்ளது.

12.3) இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக கடந்த 18.03.2022 - ஆம் தேதி அ.சா.1 சங்ககிரி காவல்நிலையத்தில் எழுத்துபூர்வமான புகார் கொடுத்துள்ளது அ.சா.ஆ-1 மூலமும், மேற்படி வாக்குமூலத்தின் பேரில் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதும், பின்னர் அன்றையதினமே சம்பவஇடம் சென்று பார்வை மகஜர் (அ.சா.ஆ.3) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார்செய்துள்ளது அ.சா.3-ன் சாட்சியத்தின் மூலமும், வழக்கில் கண்ட வாகனங்களை மோட்டார்

வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கைகள் (அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6) பெறப்பட்டுள்ளதும், இவ்வழக்கு விபத்தில் அ.சா.2-க்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது அ.சா.ஆ.8 விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் அ.சா.ஆ.10 காயச்சான்றிதழ் மூலமும், சாட்சி-3 க்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது அ.சாஆ.7 விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் அ.சா.ஆ.9 காயச்சான்றிதழ் மூலமும், மேலும் அ.சா.2-க்கு சாட்சி-3 க்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்பதால் அ.சா.ஆ.11 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார்செய்யப்பட்டுள்ளது அ.சா.3-ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணமாகியுள்ளது. மேலும் மேற்படி விபத்தானது இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்பது மேற்கண்ட வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் மூலம் நிரூபணமாகியுள்ளது.

12.4) மேற்படி விபத்தின் மூலம் அ.சா.2 மற்றும் சாட்சி 3 - க்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது நிரூபணமாகியுள்ள நிலையில், இவ்வழக்கு விபத்தை எதிரி மேற்படி வாகனத்தை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினாரா என்பது குறித்து பரிசீலிக்கும்போது, இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 14.02.2022 ம் தேதி, இரவு சுமார் 06.00 மணியளவில் தான் தன்னுடைய வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக தனது Pulsar இருசக்கர வாகனத்தில் சங்ககிரி டோல்கேட்டிற்கு முன்பாக 99 காபி பார் கடை அருகே சாலையின் இடதுபுறமாக இருசக்கர வாகனங்கள் செல்லும் வெள்ளைக்கோட்டிற்கு

சென்றுகொண்டிருந்ததாகவும், அப்போது தனக்கு எதிரே டிராக்டர் ஒன்று வந்துகொண்டிருந்ததாகவும், அந்த டிராக்டர் நேராக வந்து தன் மீது மோதிவிட்டதாகவும், மோதியவுடன் தான் சுமார் 05 அடி துாரம் தள்ளி விழுந்துவிட்டதாகவும், விபத்தில் தனக்கு தாடையிலும், காலிலும் அடிப்பட்டதாகவும், பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் சேலம் விம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்ததாகவும், பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் சேர்த்தாகவும், ஆஜர் எதிரி தான் மேற்படி டிராக்டர் வாகனத்தை ஓட்டிவந்த நபர் என்றும் சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

12.5) எனவே மேற்படி பரிசீலனையிலிருந்து எதிரி TN 46 F 8561 என்ற பதிவெண்கொண்ட டிராக்டர் வாகனத்தை ஓட்டிச்சென்று அ.சா.2 ஓட்டிவந்த TN 30 BP 3369 என்ற பதிவெண்கொண்ட பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தி அ.சா2 மற்றும் சாட்சி-3 க்கு கொடுங்காயங்களை ஏற்படுத்தியுள்ளார் என்பது சந்தேகத்திற்கிடமின்றி இவ்வழக்கில் அரசுதரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. இறுதியாக, எதிரிமீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 279, 338 (2 Counts) of IPC-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவுசெய்து, எதிரி பிரிவுகள் 279, 338 (2 Counts) of IPC-ன் கீழ் குற்றவாளியென தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 279

of IPC -ன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் இரண்டுவாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும், பிரிவு 338 of IPC பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.2000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் இரண்டுவாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும் விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2) -ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. 3000/-. வழக்குச்சொத்து இல்லை.

எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்து, இன்று 06.03.2026 - ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.03.06 17:52:11 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:-

| | |
|---|---|
| அ.சா.1 | லாவண்யா, புகார்தாரர் சாட்சி |
| அ.சா.2 | விக்னேஷ், காயம்பட்ட சாட்சி |
| அ.சா.3 | திரு.செல்வகுமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர். |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 18.03.2022 | புகார் |
| அ.சா.ஆ.2 | 18.03.2022 | முதல் தகவல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 18.03.2022 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | 18.03.2022 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 21.03.2022 | TN 46 F 8561 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை. |
| அ.சா.ஆ.6 | 06.04.2022 | TN 30 BP 3369 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை. |
| அ.சா.ஆ.7 | 14.3.2022 | சாட்சி3-ன் விபத்து பதிவேட்டு அறிக்கை |
| அ.சா.ஆ-8 | 15.03.2022- | அ.சா.2-ன் விபத்து பதிவேட்டு அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 14.03.2022 | சாட்சி3-ன் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.10 | 15.03.2022 | அ.சா.2-ன் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.11 | 08.04.2022 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை. |

சான்றுப்பொருள் : இல்லை.

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

குறிப்புகள்:

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

SATHIYA S Digitally signed by SATHIYA S Date: 2026.03.06 17:52:18 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.

JUDICIAL MAGISTRATE NO.I COURT, SANKARI
PRESENT: TMT.S.SATHIYA, B.A.,B.L.,
JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI

CASE SUMMARY

CC-225/2024, Cr.No.100/2022, SANKARI POLICE STATION

CNR.No.TNSA-09-001053-2024

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | The accused was station bail |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 07.02.2023 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 03.05.2023 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 317 of the Code | Petition filed by the petitioner/ Accused U/s.70(2) of Cr.P.C, and surrender petition, Advance hearing petition, Recall petition, for which numbers assigned as CMP.No.1366/2025, 1367/2025, 1368/2025 dated: 27.11.2025 Petitions were allowed on 27.11.2025. |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | PW1, PW2 Chief examined and cross examined on 16.02.2026. |
| | | PW3 Chief and cross examined on 02.03.2026. |
| vii | Date of examination of the accused under section 313 of the Code | 04.03.2026 |
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

SATHIYA S Digitally signed by SATHIYA S
Date: 2026.03.06 17:52:25 -0100

Judicial Magistrate No.I,
Sankari

## JUDICIAL FORM NO. 61

## (Rule 106 of Crl.R.P)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI

JUDGMENT IN CC.NO. 225/2024

Complainant : காவல் உதவி ஆய்வாளர், சங்ககிரி காவல்நிலையம்.

Accused : சதீஷ்குமார்

Offence : U/Sec. 279, 338 of IPC

Finding : எதிரி இதச. 279, 338 of IPC ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டது.

Sentence : எதிரிக்கு குவிமுச பிரிவு. 255(2) - ன் கீழ் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

| Serial Number | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father's Name | Caste or Religion | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | சதீஷ்குமார் | பெருமாள் | இந்து | டிரைவர் | ஒழுகுபாறை, அன்னதானப்பட்டி, மாவேலிபாளையம், சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம் | 41 |

| Date of | | | | | | | Explanation of delay |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension of appearance | Released on bail | Commencement of trial | Close of trial | Sentence or order | |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 15.03.2022 | 18.03.2022 | 21.03.2022 | 21.03.2022 (Station bail) | 16.02.2026 | 02.03.2026 | 06.03.2026 | - |

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.03.06 17:52:39 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.